Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 04 திங்கட்கிழமை (19-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 343

மங்கைமாரின் மனம் மாங்கும்
ஜவுளிகளின் எழில்மிகு
காட்சியகம்
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## யுத்தத்தை முன்னெடுக்க இராணுவ பலம் அவசியம்

# பிரச்சினைக்கான தீர்வு என்பது யுத்த நிறுத்தத்தைக் குறிக்காது!

## திவயினவுக்கு கொடித்துவக்கு பேட்டி

(நமது நிருபர்)

நீண்டகாலமாக தீர்வுகாணப்படாமல் இருந்துவரும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அரசியல் தீர்வை நாம் முன்வைக்கும் போது மறுபுறத்தில் ஆயுதம் ஏந்திப் போராடுபவர்களுக்கு எதிரான யுத்தத்தையும் முன்னெடுத்துச் செல்வோம். எதிரிகளைப் பலவீனப்படுத்துவதற்கு நம் இராணுவத்தினரின் பலத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளதென்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு திவயின சிங்களப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

திவயின பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நாம் நடைமுறைப் படுத்துவோம் என்று கூறும் போது யுத்தத்தை நிறுத்துவோம் என்று அர்த்தமாகாது யுத்தத்தின் வேகத்தை குறைப்போம் என்றும் பொருள் படாது, எதிரிகளை முதலில் பலவீனப்படுத்த வேண்டும். அதன்பின்னர்தான் அவர்களைப்பேச்சுவார்த்தைமேசைக்கு கொண்டுவர முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு திவயின சிங்களப் பத்திரிகைக்கு அளித்தவிசேட பேட்டி ஒன்றில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்

இனப்பிரசினைக்கு தீர்வு காண்பதற்கு அரசியல்தீர்வை நோக்கிசெல்வது இறுதி இலக்காக இருந்தாலும், யுத்தம் உடனடியாக நிறுத்தப்படும் என்பது இதன் கருத்தாக அமையமாட்டாது. தீவிரவா

(10ம் பக்கம் பார்க்க)

## நிலக் கண்ணியில் சிக்கி பௌத்தபிக்கு ஒருவர் பலி! மேலும் மூவர் படுகாயம்

(கொழும்பு)

கெப்பிற்றிக் கொலாவையில் பௌத்த பிக்குகள் பயணம் செய்த ஜீப் நேற்றுக் காலை நிலக்கண்ணியில் சிக்கி வெடித்துச் சிதறியதில் பிக்கு ஒருவர் ஸ்தலத்தில் பலியானார் மேலும் இரு பிக்குகள் மற்றும் வாகனச்சாரதி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்

படுகாயமடைந்த மூவரும் அநுராதபுரம் வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்

விடுதலைப் புலிகள் வைத்த நிலக்கண்ணி வெடியில்சிக்கியேபிக்குகளின்வாகனம்சேதம

(10 -ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கிரனேற் வீச்சில் 3 பொலிஸார் படுகாயம்

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் வீதி ரோந்து பணியில ஈடுபட்டிருந்த பொலிஸார் மீதுவிடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொலிசார் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் மட்டக்களப்பு தாண்டவன் வெளிச்சந்திக்கருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதல இடம்பெற்று சிறிதுநேரத்தி- மட்டக்களப்பு நகரில் நிலைகொண்டுள்ள படையினரும, பொலிசாரும சுமார்45நிமிடம்வரை சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனையடுத்து பொலிசா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நிலையத் தாக்குதல் இரு புலி உறுப்பினர்கள் கைது?

### புலனாய்வுத்துறை அறிவிப்பு

(கொழும்பு)

கடந்தயூலை மாதம் கட்டு நாயக்காவிமானப்படைதளம் மற்றும் விமானநிலையம் மீதான தாக்குதலுக்குப் பொறுப்பாக இருநததாகச் சந்தேகிக்கப்படும் இரு விடுதலைப்புலிஉறுப்பினர்களைக் கைது செய்துள்ளதாக புலனாய்வுதுறையினர் அறிவித்துள்ளனர்.

கரும்புலி புஸ்பகுமார் விக்டர்டாமினிக் ஆகிய இருவருமே கைது செய்யப் பட்டவர்களாம்.

கறுப்புபுலி புஸ்பகுமார் என்பவரே இததாக்குதலை ஒருங்கிணைத்து வழிப்படுத்தியதாகவும் இவருக்கு 100 பேர் வரை உதவிபுரிந்ததாகவும் விசாரணைகள மூலம் தெரிய வந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலை

[10ம பக்கம் பார்க்க]

## தேர்தல் ஏற்பாடு குறித்த இறுதிக் கூட்டம் 24இல்

### தேர்தல் ஆணையர் கூட்டுவார்

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றைதேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா இம்மாதம் 24ம் திகதி சனிக்கிழமை நடத்தவுள்ளார்.

[10ம் பக்கம் பார்க்க]

## தேர்தல்கண்காணிப்பு குழு கூட்டணியுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் வந்துள்ள தேர்தல் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களைச் சந்தித்து யாழ் தேர்தல் நிலைவரம குறித்து ஆராய்ந்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில், கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் வீ. ஆனந்தசங்கரி கருத்து தெரிவிக்கையில்.

தீவுப்பகுதிகளில் பொலிஸ் நிலையமோ இராணுவ

[10 ம பக்கம் பார்க்க]

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரே தெரிவு



மக்களின் வாழ்வுக்கு முன்னுரிமை வழங்கி....
எக்காலமும் இம் மண்ணில் வாழ்ந்திடும்....

X

★ உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கே உங்கள்வாக்கு ★

வீணையே உங்கள் தெரிவு ! சேவையே எங்கள் இலக்கு !

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(சி-2889)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**உடன் தேவை**

பாவித்த கதிரை, மேசை, அலுவலக மேசை உடன் தேவை. சரியான விலாச விபரங்களுடன் தொடர்பு விளம்பர இலக்கம். 100. வலம்புரி இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.


## பொதிவெடித்து இரு பொலிஸார் பலி

(கொழும்பு)

ஓட்டோவில் பிரயாணம் செய்த ஒருவர் விட்டுச்சென்ற ஒரு சிறுபொதி கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சிறிது நேரத்தில் அது வெடித்ததால் இரு பொலிஸார் கொல்லப்பட்டனர் ஊர்காவல் படையைச் சேர்ந்தஒருவர் காயமடைந்தார்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் இச்செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது

ஓட்டோவில்விட்டுச் சென்ற மேற்படி பொதியினை பாண்டிருப்பிலுள்ள வாகன பரிசோதனை நிலையத்தில் கடமையிலிருந்த ஒருபொலிஸார் முதலில் பெற்றுக் கொண்டதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கலைக்காக தம்மை அர்ப்பணித்த மூத்த கலைஞர்களின் திறமை அனைத்தும் அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்பட வேண்டும்

### யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரின் தனித்துவத்தைப் பேணிக்காப்பதற்கு தம்மை கலைக்காக அர்ப்பணித்து பணிசெய்து வருகின்ற மூத்த கலைஞர்களின் திறமைகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டும்.'

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய யாழ் மாவட்ட மூத்தகலைஞர் கௌரவிப்பு வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

எமது மூத்த பரம்பரை கலைஞர்கள் பலர் இலைமறை காயாக இருந்து கலைப் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் யாழ். பல்கலைக்கழகம் கலைகளை வளர்ப்பதற்கு நல்ல அத்திவாரத்தை இட்டுள்ளது இந்தியாவில் பல சிறந்த கலைஞர்கள் இருந்தாலும் அங்கு உள்ள எந்தவொரு கல்விநிறுவனமும் இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கு ஈடு இணையானது எமது கல்வித்தரம் குறைந்து விட்டது என்று கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. எமது கலை, இலக்கியத்தை வளர்ப்பதற்கு இளம் கலைஞர்கள் முன்வர வேண்டும் என்றார்.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அங்கு சிறப்புரை ஆற்றுகையில்;

இன்று கௌரவிக்கப்படும் கலைஞர்களை அடுத்த சந்ததி அறிய வேண்டுமாயின் அவர்களின் புகைப்படங்கள் அடங்கிய நூலை வெளியிட்டு ஆவணப்படுத்த வேண்டும். குடாநாட்டிலுள்ள பல மூத்த கலைஞர்கள் இன்று தவறவிடப்பட்டுள்ளமை மிகுந்த மனவேதனையைத் தருகிறது. கலாசார உத்தியோகத்தர்கள் இளையோராக இருப்பதால் இத்தவறு நேர்ந்திருக்கலாம் அடுத்தடவை இவர்கள் அனைவரும் உள்வாங்கப்பட வேண்டும். அரசியலுக்கு அப்பால் இந்த தெரிவை முன்னெடுக்க கலாசார திணைக்களம் இனிவரும் காலங்களில் முயலவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் 83 கலைஞர்கள் "கலைஞானகேசரி" என்றபட்டம் வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கின் அபிவிருத்தி அமைச்சு செயலாளர் வே. இரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இசைப்பேரரசு ந. வீரமணிஐயர், புலவர் ஏ டபிள்யூ. அரியநாயகம் ஆகியோரும சிறப்புரை ஆற்றினர். (க-106)

## ஐ. தே. க.

யின் சார்பாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின்மகனும் காயமடைந்தோரில் அடங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தின் சூத்திரதாரிகளை தேடும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சர்வ வல்லமை பொருந்திய சட்டம் ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளில்

### அநுரா கூறுகின்றார்

(கொழும்பு)

இன்றுள்ள அரசியல் சட்டத்தை உருவாக்கிய ஜே ஆர் ஜெயவர்த்தனா ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதற்கு மட்டுமே இந்த அரசியல் சட்டத்தில் இடம் இல்லை என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். அந்தச்சட்டமே இப்போது சந்திரிகா குமாரதுங்காவின் கைகளில்உள்ளது. விரும்பிய அமைச்சின்பொறுப்புக்களை தான் வைத்திருக்கவும்தான் விரும்பும் அமைச்சர்களை நியமிக்கவும் அவருக்கு சட்ட அதிகாரம் உண்டு இவைகளை ஜீ. எல். பீரிஸ் மறக்கக்கூடாது.

இவ்வாறு அனுரா பண்டார நாயக்கா ஜீ.எல்.பீரிஸ் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பளித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

ஐ தே கட்சியின் ஆட்சியில் தனக்கு நிதி மந்திரி பதவி கிடைக்கும் என்று பீரிஸ்கனவு காண்கிறார். கடந்த தேர்தலில் பொ. ஐ மு. சார்பில் போட்டியிட்ட பீரிஸ், ஐ தே. கட்சிக்கும் புலிகளுக்குமிடையே கூட்டு உண்டு. என்று பிரசாரம் செய்தார். அப்போது நான் ஐ.தே.கட்சியில் இருந்தேன். புலிகளுடன் கூட்டு என்பதற்கான சான்று எதுவும் அன்று இருக்கவில்லை எனவே பீரிஸின் கூற்றை எதிர்த்து அன்று நான் பிரசாரம் செய்தேன்

இன்று நேரடிச்சான்றுகள் உள்ளன. ஜோசப் பரராஜசிங்கம். இரா. சம்பந்தன் ஆகியோரின் பேச்சுக்களும், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனமும் இதை விளக்குகின்றனஎன்று மேலும் அந்த அறிக்கையில் அநுராதெரிவித்துள்ளார். (எ)


## கூடைப் பந்தாட்டப் போட்டி-2001

கடந்த 10 வருடங்களாக யாழ். நகரில் ஹட்டன் நஷனல் வங்கியினால் நடாத்தப்படும் கூடைப் பந்தாட்டப் போட்டி 2001ம் ஆண்டும் மாபெரும் போட்டியாக கழகங்கள்/பாடசாலைகளுக்கிடையே இன்று (19-11-2001) திங்கட்கிழமை வேர்பபடி மகளிர் உயர் கல்லூரி ஆடுகளத்தில் ஆரம்பமாகும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தந்து போட்டிகளைக் கண்டுகளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நேரம்:- பிற்பகல் 3.30 மணி

ஹட்டன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[C-2893]


## 31ஆம்நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

நிகழும் விஷு வருடம் ஐப்பசித் திங்கள் 4ஆம் நாள் (20. 10. 2001) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்

பேராசிரியர்

**செல்லத்துரை பாலச்சந்திரன்**

(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

அவர்கள் சுகவீனமுற்று போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டிருந்தபோது நிறைந்த வசதிகளை வழங்கி அன்புடன் வைத்திய சேவை புரிந்த வைத்திய நிபுணர்கள, தாதியர். ஊழியர்களுக்கும், இறுதக்கிரியையின் போது கண்ணீர் அஞ்சலிகள, மலர் வளையங்கள், பத்திரிகை, ஊடகத்துறைகளூடாகவும், தபால் தந்தி, தொலைபேசி மூலமாகவும, நேரில் வருகை தந்து அனுதாபமும் அஞ்சலியும் செலுத்தியோருக்கும பல்கலைக்கழகத்தில் இறுதி நிகழ்வினை குறுகிய காலத்தில நிறைவாகச் செய்த பல்கலைக்கழக நிர்வாகத்தினா, ஆசிரியர் சமூகத்தினர், அனைத்துப் பீடமாணவர்கள், ஊழியர்கள மற்றும் வாத்திய இசை வழங்கிய உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களுக்கும் வாகன வசதியை வழங்கியோருக்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19-11-2001) திங்கட்கிழமை காலை எமதில்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரணக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் அனபுடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், உறவினர்

192, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (3977




தமிழே மூச்சு - சேவையே வாழ்வு
எங்கள் கூட்டுறவாளன்

திரு. சி. சிவமகாராசா

அவர்களுக்கே உங்கள் வாக்கு



05. 12. 2001 | எம் தெரிவு 11

(இ-2895)

## விழிப்போடு செயற்பட்டு வாக்களிப்பில் தமிழ் மக்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு

# யாழ். பல்கலை சமூகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாசைகளையும், மரபுவழித் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வென்றெடுக்கவும், தமிழ் மக்கள் அனைவரும்விழிப்பாகஇருந்து எதிர்வரும்பொதுத்தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர், ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளது.

மாணவர்சங்கத்தின தலைவர் எஸ். கஜேந்திரன், செயலாளர் எம் சுகுலேஸ்வரன் ஆசிரியர்சங்கத் தலைவர் க.தேவராஜாஆகியோர் கூட்டாகக் கையெழுத்திட்டு வெளியிட்ட அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர் வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிநடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் நாம் தமிழினத்தின்எதிர்கால வாழ்வை மனதில் கொண்டு மிகவும் விழிப்புடனும் அக்கறையுடனும் செயற்பட வேண்டிய ஓர் இக்கட்டான நிலையிலுள்ளோம். 1977ஆம் ஆண்டின பின் தமிழினம் ஸ்ரீலங்கா அரசு நடத்தும் தேர்தல்களைப் புறக்கணித்தே வந்துள்ளது. பாராளுமன்றம் சென்று எமது உரிமைகளைப் பெறமுடியாதுஎன்பது எமக்கு தெளிவாக தெரிந்திருந்ததன் காரணமாகவே நாம் அத்தேர்தல்களைப் புறக்கணித்தோம்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்தளவு வாக்குகளோடு அல்லது தேர்தல்

### தேர்தல் வியூகம்

மோசடிகள மூலம் பதவிக்கு வந்த சில ஆயுதம் ஏந்திய தமிழ்கட்சிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக உலகிற்கு காட்டிய சிறீலங்கா அரசு அவர்களின் ஆதரவோடு தமிழினத்தின் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நடத்தி வருகிறது.

அது மட்டுமின்றி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற பெயர்களில் சில சலுகைகளை தமிழ்மக்களுக்கு அள்ளி வீசியதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான வேட்கையை மழுங்கடிக்கச் செய்து, போராட்டத்திற்கான தமிழ் மக்களின் ஆதரவை திசை திருப்பவும் முயன்று வருகிறது. இதன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகளோடு கூடிய நிரந்தர சமாதானத் தீர்வு பின் தள்ளப்பட்டுக் கொண்டே வருகிறது.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் விரும்புவது எமது அபிலாசைகளான தனித்தேசிய இனம், மரபு வழித்தாயகம், சுயநிர்ணய உரிமைஎன்பன பூர்த்தி செய்யப்பட்ட ஓர் நிரந்தர சமாதானத்தையே! ஸ்ரீலங்கா அரசு புலிகள் மீதான தடையை நீக்கி யுத்தத்தை நிறுத்தி, தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்கி இயல்பான சூழ்நிலையை ஏற்படுத்தி புலிகளுடன் பேசுவதன் மூலமே நிரந்தர, சமாதானத்தை அடைய முடியும். இந்நிலையைக் குழப்பக் கூடியவர்கள்மீண்டும்பாராளுமன்றம் செல்லக் கூடாது. அவ்வாறு அவர்கள் மீண்டும் சென்றால் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நிரந்தர சமாதானத்தைப் பின்னடையச் செய்யவே வழிவகுக்கும். இதன் மூலம் நாம் அனுபவித்து வந்த இன்னல்கள் தொடரவே செய்யும்.

எனவே தொடர்ந்தும் அபிவிருத்திஎன்று கூறிக்கொண்டு மறுபுறம் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றிற்கு ஆதரவளிப்பதன் மூலம் சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாக இருப்பவர்கள மீண்டும் பாராளுமன்றம் செல்லக்கூடாது. எனவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் விழிப்போடு எமது வாக்குரிமைகளை பயன்படுத்த வேண்டி உள்ளது. தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு நாம் அனைவரும் சென்று வாக்களிப்பதன் மூலம் இவ்வாறான சக்திகளின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரமுடியும். எனவே தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### சினைப்பர் தாக்குதல் 3புலிகள் பலி

(கொழும்பு)

கடந்த11ஆம்திகதிதொடக்கம்17ஆம்திகதி வரையான காலப் பகுதியில் நாகர்கோவில் முகமாலை, பொன்னார் ஆகியபகுதிகளில் இராணுவத்தினர்மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில்மூன்றுவிடுதலைப் புலிகள்கொல்லப்பட்டதாக ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (எ)

### சூட்டுக் கொலை

(திருமலை)

தமிழ் பொது மகன் ஒருவர் இனம் தெரியாத ஆயுததாரிகளால்சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று திருமலை தம்பலகாமம் பகுதியில் கடந்த 16ஆம்திகதி இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப நபர் வீட்டில் தங்கியிருந்த வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சாம்சிவப்பிரசாமி(வயது55 என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார். (க)

### மகளிர் குழு வருகை

(மீசாலை)

இலங்கை செடெக் நிறுவன மகளிர் அபிவிருத்திக் குழுவினர் எதிர் வரும் 20 ஆம்திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர் என்றும், அவர்கள் குடாநாட்டிலுள்ள சில மகளிர் குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-229)

# தமிழரின் சுதந்திரத்திற்காகவே விடுதலைப்புலிகள் போராடுகிறார்கள்

## கனடா மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

### சி வி.கே. சிவஞானம் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகப் போரிடும் மக்கள்சார்ந்த அமைப்பாகும். அந்த அமைப்பின் தடையை கனடா அரசு மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் யாழ். மாநகர சபை ஆணையாளரும், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தேர்தல்பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவில் முன்றலில் இக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடை பெற்றது.

நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் ஒரு கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் சி.வி.கே. சிவஞானம் அங்கு பேசுகையில் மேலும் கூறியிருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக போராடும் மக்கள் சார்ந்த இனவிடுதலை அமைப்பே விடுதலைப்புலிகள் அமைப்பாகும் என்பதை கனடா நன்கு உணர வேண்டும். இந்த நிலையைக்கவனத்தில் எடுத்துகனடா அரசு விடுதலைப் புலிகள் மீதுவிதித்துள்ள தடையை மீள் பரிசீலனைசெய்ய வேண்டும் என்று சி.வி.கே. சிவஞானம் கேட்டுக் கொண்டுள்ளார். (எ- வ-43)

## அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தம் முடிவு

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்களின் வேலை நிறுத்தம் முடிவிற்கு வந்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமும், சுகாதார அமைச்சின் செயலாளரும் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இவ் விணக்கம் ஏற்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளை சுகாதார அமைச்சின் செயலாளர் நிறைவேற்றிவைப்பார் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (செ)

# தேர்தலில் தோல்வி அடைந்து ரணில் சாதனை படைப்பார்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் தோல்வியடைந்து ரணில் விக்கிரம சிங்கா மகத்தான சாதனைபடைக்கப் போகிறார்.

ஜனதா விமுத்தி பெரமுனையின செயலர் ரில்வின் சில்வா மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மாத்தளையில் இடம் பெற்ற ஜே. வி. பி. பிரசாரக் கூட்டத்தில உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்; ரணில் விக்கிரம சிங்கா ஏற்கனவே 11 முறை தேர்தல்களில் தோல்வி கண்டவர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியும, ஜனதாவிமுக்தி பெரமுனையும் இணைந்து பணியாற்றிய ஒருசில வாரங்களுள் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன:

அரசாங்க வங்கிகளை சூறையாடியவர்களுடன் சேர்ந்து ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்தை கவிழ்த்தார்

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் இது போன்றே செயற்படுமானால் அது ஐக்கிய தேசியக் கட்சி என்ற கப்பல் கவிழ்வதையே எடுத்துக் காட்டும என்றார். (க)


# பாராளுமன்றத் தேர்தல் - 2001

## அன்பான தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களே!

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர்

**மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா**

அவர்கள் எமக்கு ஆற்றிய சேவையைநாங்கள் என்றும் மறவோம்.
எமது தீவகத்தில் பிறந்து எமது அமைச்சருடன் தோழோடு தோழாக நிற்கும் எமது தீவகத்தின் மைந்தன்



**திரு. மதனராஜா (மனோ)**

அவர்கள் தமிழ் பேசும் மக்களாகிய நமது விடிவை நோக்கி முன்னெடுத்துச் செல்லும் அவரது பாதையை ஆதரித்து மிகக் கூடுதலான வாக்கை வீணைச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ் மக்களின் துயர் தீர்க்க பாராளுமன்றம் அனுப்புமாறு மிகப்பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலையம், ஊர்காவற்றுறை.**

(3976)

# மக்கள் வங்கி

## வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி

## 21. 11. 2001 புதன்கிழமை அன்று

## அச்சுவேலியில் கோலாகலமான திறப்பு விழா வைபவம்

**அச்சுவேலிக்கு ஒரு முழுமையான மக்கள் வங்கி கிளை**

தற்போது யாழ் ஸ்ரான்லி வீதியின் நீடித்த கருமபீடமாக இயங்கிவரும் அச்சுவேலி மக்கள் வங்கி எதிர்வரும் **21. 11. 2001** புதன்கிழமை முதல் ஒரு தனித்துவமான கிளையாக இயங்கவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் இவ் வைபவத்தில், அரச உயரதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் மக்கள் வங்கி உயரதிகாரிகள் மற்றும் பல பிரமுகர்கள் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

## எமது அன்பான வாடிக்கையாளர்களே

தாங்கள் அனைவரும் அன்றைய தினம் இவ் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் அழைக்கிறோம்.

# மக்கள் வங்கியின்

**வர்த்தகர்களுக்கும், நிறுவனங்களுக்குமான - நடைமுறைக் கணக்குகள்**

மகளிருக்கான விசேட சேமிப்புத் திட்டமான வனிதா வாசனா
குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டமான இசுரு உதான
பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்புத் திட்டமான சிசு உதான
விசேட சேமிப்புத் திட்டமான ஜனஜய

மற்றும் மாதாந்த சேமிப்புக் கணக்கான முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் போன்ற புதிய கணக்குகளை அன்றைய தினம் ஆரம்பித்தும் தற்போது அச்சுவேலியில் தாங்கள் வைத்திருக்கும் கணக்குகளில் பண வைப்புக்களை மேற்கொண்டும் புதிய வாடிக்கையாளர்களை அறிமுகம் செய்தும் வைபவத்தை சிறப்பிக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு அன்றைய தினம் தொடக்கம் அச்சுவேலி கிளைக்குரிய காசோலைப் புத்தகம் வழங்கப்படும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்**

அச்சுவேலி மக்கள் வங்கியின் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வங்கியின் சொத்துக்களான வாடிக்கையாளர்களாகிய தங்களது பேராதரவினை மேன்மேலும் வேண்டி நிற்கிறோம்.

**அன்றைய தினம் காலை 8.50ற்கு அச்சுவேலி மக்கள் வங்கி முன்றலில் தவறாத தங்களின் வரவை**

## ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

**பிராந்திய முகாமையாளர்**
மக்கள் வங்கி யாழ்ப்பாணம்

(சி-2871)

# செய்தித் துளிகள்

## வான் முழக்கம் சஞ்சிகை

[யாழ்ப்பாணம்]

வான் முழக்கம் என்னும் மாத சஞ்சிகை யொன்று இம் மாதம் முதல் வெளிவரவுள்ளது.

இச் சஞ்சிகையில் சமூக அரசியல் அறிவியல் போன்ற பல அம்சங்கள் இடம் பெறவுள்ளது. (வ)

## இருவர் பலி

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து மேற்கே 8கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பூவரசங்குளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விமானப்படையினரின் பாதுகாப்பு நிலைமீது கடந்த13ஆம் திகதி விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்கிய போது அவர்கள் வீசிய இரு கிறெனெட்டுகள் வெடித்ததில் இரு விமானப் படையினர் கொல்லப்பட்டனர்.

விமானப்படையினர் சிறு ஆயுதங்களால் தாக்கியதையடுத்து விடுதலைப் புலிகள் பின்வாங்கிச் சென்றதாகவும், அவர்களுக்கு உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுவதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது. (எ)

## 4ஆம் திகதி ஒன்றுகூடுக

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பணியாளர் களை 4ஆம் திகதி காலை 6.00மணிக்கு பத்திய கல்லூரியில் ஒன்று கூடும்படி உதவித் தேர்தல் ஆணையாளர் சி.நடராஜா கேட்டுள்ளார். [உ-19]

## இராணுவ வீரர் பலி

(கொழும்பு)

வவுனியாவிற்கு வடமேற்கே உள்ள கிடச்சூரிபகுதியில் சைக்கிளில் ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தியதில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி காலை 8 45 மணியளவில் நடை பெற்றது. இராணுவத்தினர் திருப்பிச் சுட்டதல் விடுதலைப் புலிகள் பின் வாங்கிச் சென்றுள்ளனர். அவர்களின் இழப்பு விபரம் தெரியவில்லை.

இச் செய்தியை விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ)

## மாடுகளுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவனில் கால் நடை வளர்ப்போரின் நன்மை கருதி, மாடுகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்துஏற்றும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் அ.த.க பாடசாலை அருகே நடை பெறவுள்ளது. (செ-02)

## சிறுவர் உள நலப்பயிற்சி

(மீசாலை)

யாழ்ப்பாணம் வை எம்,சி. ஏ. நிறுவனத்தினர் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறுவர்களுக்கான உளநலப் பயிற்சிப் பாசறை ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இதில், 10-15 வயதுடையவர்கள் பங்கேற்க முடியும். (உ-229)

## இன்று சோமவாரம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலணி திருக்கூடவாயில் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோயிலில் முதலாம் சோமவாரநிகழ்வுகள் இன்று மாலை 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூஜையும் திருவிழாவும் நடைபெறும். (எ-207)

## மாட்டு வண்டியில் தேர்தல் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம்5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில்போட்டியிடும் க.கணபதிப்பிள்ளை மாட்டுவண்டியில்சென்று தனது தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார்.

குடாநாட்டில் தற்போது எரிபொருள் இருப்பில் இருந்தும்அதற்கு நிலவும் தட்டுப்பாட்டை எடுத்துக் காட்டும் வகையில் பிரசாரத்தை உடுப்பிட்டிபல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருமான க.கணபதிப்பிள்ளை மேற்கொண்டு வருகிறார். [வ]

## கணனிவசதி

(அளவெட்டி)

மாகியம்பதி முற்போக்கு வாலிபர் சங்கத்தின் நூலகம் அடுத்தாண்டு தொடக்கம் கணனி மயப்படுத்தப்படவுள்ளது.

போருட் உதவியுடன்இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் அங்கு கணனிப்பயிற்சிகள் அளிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-237)

## உதவிப்பணம் வழங்கல்

(மானிப்பாய்)

வலி தென்மேற்குசண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும், மற்றும் தொழுநோய், காசநோய் புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தினைப் பெற்றுக்கொள்பவர்களினதும் நவமபர்மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-120)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவையினரின் கந்தசஷ்டி காலவிசேட நிகழ்வாக தினமும் இடம்பெறும், செஞ்சொற் செல்வர் இரா. செல்வ வடிவேலின் சொற்பொழிவில் இன்று 'முருகன் பெருமை' என்னும்தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. [செ]

## மாநகரசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் நிதிக்குழுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதிநடைபெறவுள்ளதாகவும் மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-19)

# ஆசிரியர் சம்பள நிலுவை விவகாரம்

# விரைவில் தொழிற்சங்கநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1999 ஆம் ஆண்டிலே பதவி உயர்வு வழங்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணம், தீவகம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இவ்வாறு 5 கோடி ரூபா சம்பள நிலுவை வழங்கப்பட வேண்டும எனவும்,

சம்பள நிலுவையைவழங்குவதில் தொடர்ந்தும் இழுத்தடிப்புக்கள் நிகழுமானால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதுடன்;

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க. பொ.த (சா/த) பரீட்சையின்போது ஒத்துழையாமை செயற்பாட்டில் இறங்கவேண்டி வரும் எனவும் ஆசிரிய சங்கவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-19)

# சம்மாந்துறை தொண்டராசிரியர் உண்ணாவிரதம் தொடர்கிறது

(மட்டக்களப்பு)

சம்மாந்துறைக் கல்வி வலயத்திற்குட்பட்ட தொண்டராசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக சம்மாந்துறை தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் வி. வேந்தன் தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைகளுக்கு அரசு இது வரை எந்தவித மான நியாயமானபதிலையும் தரவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண தொண்டராசிரியர் சங்க இணைப்பாளர் இரா. ஜெயமோகன் விடுத்த அறிக்கையில் சம்மாந்துறை தொண்டராசிரியர் விடயத்தில் அரசின் அசமந்தப் போக்கு எமக்கு கவலையளிக்கின்றது.

வடக்கு கிழக்கிலுள்ள தொண்டராசிரியர் விடயத்தில் அரசு தலையிட்டு நிரந்தர நியமனத்திற்கு ஆவன செய்ய வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த திங்களன்று ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று 7 ஆவது நாளாக தொடர்ந்து இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## இராசி பலன்

(19-11-2001)

கார்த்திகை 04, திங்கள்
சதுர்த்தி ந.ப 12..06
பூராடம் மு இ 11. 12
இராகுகாலம் 7 39-9 09
சுபநேரம் 12.09-1,39

**மேடம்**

உடல் உழைப்பு, வியாதி. அதிகாரிகள் மனஸ்தாபம், காரிய தாமதம்.

**இடபம்**

போசன சுகம், உறவினர் வெறுப்பு,பிரயாண கஷ்டம், வாக்கு பலிதம்.

**மிதுனம்**

குடும்ப சுகம், காரிய அனுகூலம்,நல்ல வரவேற்பு, தனலாபம்.

**கடகம்**

பண வருவாய், ஆரோக்கியம், குதூகலம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

செல்வாக்கு,காரிய மந்தம், உடல் சோர்வு,கலகம்.

**கன்னி**

தன்னம்பிக்கை குறைவு, ரோக பயம், சகோதரர் உதவி,எதிர்பாராத நன்மை.

**துலாம்**

இனிய சம்பவம், தனவரவு, எடுதத காரியம் கைகூடும், வாக்கு பலிதம்.

**விருச்சிகம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு குறைவு, தொழில் மந்தம்,உறவினர் உதவி, காரிய தாமதம்.

**தனுசு**

நல்ல முயற்சி, தொழில் முன்னேற்றம், சயன சுகம், உடல் நலம்.

**மகரம்**

கோபப்படுதல், முயற்சி கைகூடும், பிரயாணம், தொழில் நன்மை.

**கும்பம்**

நினைத்த காரியம் கைகூடும்,பொருள் சேர்க்கை, தர்மம,தொழில் சிறப்பு.

**மீனம்**

நல்ல செய்தி, தொழில் விருத்தி,பிறர் உதவி, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# வன்னிக்கு உணவுப் பொருள்கள்

இம் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம்13ஆம்திகதிவரை யானகாலப்பகுதியில் 60 லொறிகளில் உணவுப்பொருளும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களும் பிரமனாலங்குளம் பரிசோதனை நிலையத்திற்கு ஊடாக கிளிநொச்சி முல்லைத்தீவு,மன்னார்ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காலப் பகுதியில் 20 லொறிகளில் உரமும் முல்லைத்தீவுக்கு அனுப்பப் பட்டுளளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி,மல்லாவி,முல்லைததீவு, மன்னார் முதலிய இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து இக்காலத்தில் 95 நோயாளிகள் 33 உதவியாளர்களுடன் சென்று வவுனியா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது. (எ)

# ஜனாதிபதியின் பொறுப்பு பகிர்ந்து அளிக்கப்படாது

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிகார பீடத்திலிருந்து வேறுபட்ட தான இன்னுமொரு அதிகார மையம் பாராளுமன்றத்தில் உருவாக்கப்படமுடியாது என்றுபொ.ஐ.முவின்தேர்தல் விஞ்ஞாபனததில குறிப்பிடப்பட்டுளளது.

விஞ்ஞாபனத்தின் அத்தியாயம்21ஆன் இறுதிப் பந்திகளில் 37-வது பக்கத்தில்.பிரதமர் ஒருவரை நியமிப்பதும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பதும் முற்றிலு ஜனாதிபதியினுடைய பொறுப்பாகும் எனறும்,இதனைச் செய்வதற்குபிரதமரையோ,வேறு ஏதேனும சிபார்சுகளையோ பெறுவது அவசியமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# வயல்களில் இலைச் சுருட்டி போக்கும் வழிவகைகள்

யாழ். மாவட்டத்தில் தற்போது பரவலாக இலை சுருட்டி அல்லது இலைமடிச் சுக்கட்டியின் தாக்கம் அவதானிக்கப்படுகின்றது. தற்போதைய காலநிலை இப் பீடை பெருக்கததிற்கு சாதகமாக இருப்பதுடன் தாக்கப்பட்ட பயிர் இலைகள் நீளமாக சுருட்டப்பட்டு அல்லது இலைகள மடிக்கப்பட்டு இருப்பதை அவதானிக்க முடியும். இப் பீடை பயிரில் எல்லாப் பருவங்களிலும் தாக்கக் கூடியது.

தாக்கப்பட்ட இலையில் சுருளை அல்லது மடிப்பை விரித்துப் பார்க்கும் பொழுது அவற்றினுள் பழுப்பு வெண்ணிறமான புழுவையோ அல்லது எச்சங்களையோ காணக் கூடியதாக இருக்கும்.

இலைகளின் பச்சையத்தை இப்புழுக்கள் உணவாகக் கொளவதால் தாக்கப்பட்ட பயிர் இலைகளின்நுனிப்பகுதி வெண்ணிறமாகக் காணப் படும்.

**கட்டுப்பாடு**

ஆத்தாக்கத்தை பயிர்களில் அவதானித்தால் குளோறோபைறிபொஸ் அல்லது பெலதியோன் பூச்சிநாசினி மருந்தை 01 அவுன்ஸ் 03 கலன் நீரில் கலந்து 40 கலன் மருந்துக் கலவையை ஒரு ஏக்கருக்கு விசிறி இதன் தாக்கத்தை கட்டுப்படுததும்படி ஆலோசனை வழங்கப்படுகின்றது மருந்து விசிறிய பின் 5-6 மணித்தியாலங்களுக்கு மழை இல்லாது இருப்பது முக்கியமான தாகும்.

நெல் வயல்களில் நீர் தேங்கி இருக்கும் இடங்களில் கால் ஏக்கருக்கு 200 கிலோகிராம் சீமைக்கிழுவை இலை அல்லது வெட்டிய எருக்கலை இலை இடுவதால் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தலாம் என்றுயாழ் உதவிவிவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) ச. சின்னத்துரை தெரிவிக்கிறார். (து)

# ஒஸாமா எங்குள்ளார் என்பது தலிபான்களுக்கு தெரியாதாம்

(காபூல்)

ஒஸாமா பின்லேடன் எங்கிருக்கிறார் என்று இதுவரை தெரியவில்லை என ஆப்கானில் உள்ள தலிபான் அமைப்பின்பேச்சாளர்முல்லா முஹமட் தெரிவித்துள்ளார்.

தலிபானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆப்கானின் பலம்; குறைந்துள்ள இதே வேளையில் பின்லேடன் எங்கிருக்கிறார் என்பது பற்றி இதுவரை உறுதி செய்யபடவில்லைஎன்று பி. பி சிக்கு பேட்டியளித்த தலிபான் அமைப்பின் முக்கிய பேச்சாளர் முகமட் ஹையா தெரிவித்துள்ளார்.

இதேவேளை. தலிபானின் தலைவர் முல்லா முஹமட் வடக்குக் கூட்டணியினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார் என்ற தகவலில் எதுவித உண்மையும் இல்லை அப்படி அவர்கள் கூறுவதுபோல் அவர் கைது செய்யப்பட்டால் சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் முஹமட்டை இனங்காட்ட முடியுமா என்று கேள்வியெழுப்பியுள்ளார்;

தலிபானின் தலைவர் முல்லாமுகமட் பத்திரமாக இருப்பதுடன் எதுவித சிறு காயங்களோ அல்லது துன்பங்களோ இன்றி நலமாக உள்ளார் என்றும் உறுதிப்படுத்தியுள்ளார்; (உ-7)

## உலக அழகுராணியாக ஆபிரிக்கப் பெண் தெரிவு

(பிறிற்ரோறியா)

தென்னாபிரிக்காவின் ஷன் சிற்றியில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் நைஜீரியாவைச் சேர்ந்த 18வயதான அக்பானி ரெனிபோ உலக அழகியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலக அழகுராணிப் போட்டியில் கறுப்பின ஆபிரிக்க பெண் ஒருவர் அழகுராணியாக தெரிவானமை இதுவே முதல் தடவையாகும்

மேற்படி அழகுராணிப் போட்டியில் 93 நாடுகளைச் சேர்ந்த உலக அழகிகள் பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ- 7)

## இரு நாட்டு உறவுகளை பலப்படுத்த பாகிஸ்தான் அதிபர் சீனா பயணமாவார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் அடுத்த மாதம் சீனா செல்லவுள்ளார்.

இஸ்லாமாபாத்திற்கும் வாஷிங்டனுக்குமிடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டிருப்பதால் சீனாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையில் இருந்த உறவில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதை விளக்கவே இப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் 20ஆம்திகதி இவரது பயணம் தொடருமென்றும் இதற்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாகவும் இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன, (து)




## உலகின் மிகப் பெரிய திரி சூலம்

(காத்மண்டு)

உலகின் மிகப்பெரிய திரிசூலம் நேபாள தலைநகர் காத்மண்டுவில் நிறுவப்பட்டுள்ளது; 32 அடி உயரமான இத் திரிசூலத்தை செய்ய 5 தொன் செம்பு பயன்படுத்தப்பட்டது; நேபாள சிவ சேனை அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

உலகின் ஒரே ஒரு இந்து மத நாடு நேபாளம் என்பது குறிப்பிடத்தக்கது (செ-02)

## நெல்சன் மண்டேலாவிற்கு கனடா அரசாங்கம் கலாநிதிப்பட்டம் வழங்கியது

(ஒட்டாவா)

தென்னாபிரிக்காவின் முன்னாள ஜனாதிபதியும் கறுப்பினத்தவருமானநெல்சன்மண்டேலாவிறகு கனடா அரசுப் பல்கலைக்கழகம் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

83வயதான மண்டேலா உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் சிறுவர்களுக்காக மேற்கொண்டுவரும் ஆதரவு நடவடிக்கைகளைப் பாராட்டியே இக் கௌரவம் வழங்கப்படுவதாக கனடா அரசு அறிவித்துள்ளது;

இதேவேளை கனடா பாடசாலை ஒன்றுக்கு நெல்சன் மண்டேலாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-2)

## ஆளுநர் நியமனத்தில் மாநில முதலமைச்சர்களின் ஆலோசனை பெறப்படும்

(புதுடில்லி)

ஆளுநர்கள நியமனத்தில் மாநில முதலமைச்சர்கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்று மாநிலங்களுக்கான பரிந்துரைக்குழு சிபார்சு செய்திருக்கிறது.

பரிந்துரைக்குழுக்கூட்டத்தில் இது பற்றிததீர்மானிக்கையில், அரசியல் சாசனத்தில் மாநில முதல்வர்கள் ஆளுநர் விடயத்தில் தலையிட உரிமையில்லையென்றும் சாசனம் திருத்தியமைக்கப்பட வேண்டும என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாநில ஆளுநர்கள் தேவையில்லை யென்றும் அந்த முறைமையைரத்து செய்யவேண்டும் என்றும் தமிழகமுதல்வர் பன்னீர் செல்வம் புதுடில்லியில் பாதுகாப்புக்கான மகாநாட்டில் தெரிவித்தார். (து)

## துர்நடத்தையில் ஈடுபடுத்திய பெற்றோருக்கு தண்டனை

(பாரிஸ்)

உணவிற்கும் பணத்திற்குமாக தமது நான்கு பெண் பிள்ளைகளையும் துர்நடத்தையில் ஈடுபடுத்திய பெற்றோர்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பிரான்ஸ்ஸில் இடம்பெற்றுள்ளது:

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, துர்நடத்தையில் ஈடுபடமறுத்த பிள்ளைகளை பெற்றார் அடித்து துன்புறுத்தியுள்ளனர். கொடுமை தாங்கமுடியாது பிள்ளைகள் பெற்றோர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிந்துள்ளனர்.

பிரான்ஸ் அரசாங்கம் தாய்க்கு 16 வருடங்களும், தந்தைக்கு 12 வருடங்களும் சிறைத்தண்டனை விதித்துள்ளது. (செ)

## ஆத்திரமுற்ற யானைகள் வழிமறிப்பு போராட்டம் அஸாமில் அதிசய சம்பவம்

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் 100 ற்கும் மேற்பட்டயானைகள் ரயில்பாதையின் முன் நின்று வழிமறிப்புப் போராட்டத்தை தொடங்கியுள்ளன.

லெடோவிலிருந்து டிகுறாவை நோக்கிச் சென்ற ரயிலில், இரண்டு பெரிய யானைகள் உட்பட 6 யானைகள் மோதுண்டு இறந்துள்ளன;

இதனாலேயே கவலையும், கோபமும் கொண்ட நூறிற்கும் மேற்பட்ட யானைகள் பலியுண்ட யானைகளின் சதைத் துண்டங்களை ரயில் பாதையில் குவித்து அதன் முன் வழிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த யானைகளைத் துரத்தும் பணியில் ரயில்வே அதிகாரிகள் மற்றும் 250 இற்கும் மேற்பட்ட பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். (உ-7)

## வடக்கு கூட்டணியிடம் இழக்க மாட்டோம்

### தலிபான் உறுதிபட தெரிவிப்பு

(காபூல்)

தமது கோட்டையாக விளங்கும் கந்தகார் நகரை வடக்கு கூட்டணியிடம் இழக்கப்போவதில்லை என்று தலிபான் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒஸாமா பின்லேடன் எங்குள்ளார் என்னும் பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. லேடன் ஆப்கானில் இருந்து வெளியேறி விட்டதாக செய்யப்படும் பிரசாரங்களை தலிபான்கள் மறுத்துள்ளனர்; ஆயினும் லேடன் தலிபான் கட்டுப்பாட்டுப் பகுதியில்உள்ளாரா அல்லது எதிர் கூட்டணியின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளாரா என்றும் தெரிவிக்கப்படவில்லை;

கந்தகார் நகரை கைப்பற்ற வடக்குக் கூட்டணியினர் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ள அதே வேளைதலிபான்களும் கடும் எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (செ-02)




## இலங்கை அணி இங்கிலாந்துக்கு சுற்றுலா

(கொழும்பு)

இலங்கை அணிமுதல்தடவையாக மூன்று டெஸ்ட் போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடர் ஒன்றில் விளையாடுவதற்காக அடுத்தவருடம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செல்லவுள்ளது;

2002 ஆம்ஆண்டு மேமாதத்தில் இப்போட்டிகள் ஆரம்பமாக உள்ளது. டெஸ்ட்போட்டிகள் முடிவடைந்தபின்னர் இங்கிலாந்து. இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் முக்கோண ஒரு நாள் போட்டித்தொடர் யூன்-27 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கு முன்பு இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளதோடு ஒரு டெஸ்ட் போட்டி வீதமே கலந்துகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது; (செ-02)

## 19 வயதிற்குட்பட்டோருக்கான உலக கிண்ண கிரிக்கெட் ஜனவரியில் நடைபெறும்

(இலண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் அனுசரணையுடன் 19 வயதின்கீழ் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

16 நாடுகள் கலந்துகொள்ளும் இப்போட்டித் தொடர் 2002 ஜனவரி மாதம் 14 ஆம் திகதிதொடக்கம் பெப்ரவரி 9 ஆம் திகதிவரை நடைபெறும் இப்போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்ச்சிகள் கிரைஸ்ட் சேர்ச் நகரில் இடம்பெறவுள்ளது: இப்போட்டித்தொடர் கடந்த முறை இலங்கையில் நடைபெற்றது. அதில் இந்தியஅணி வெற்றிக் கிண்ணத்தை வென்றது 16 அணிகளும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற உள்ளன; (செ-02)

## தரப்படுத்தல் பட்டியலில் அன்டிபிளவர் முதலிடம்

(லண்டன்)

பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் 'நிறுவனத்தின் மிகவும் அண்மைய கிரிக்கெட் வீரர்களின் தரப்படுத்தல் பட்டியல வெளியிடப்பட்டுள்ளது

துடுப்பாட்டத்தில் முதல் இடத்தை சிம்பாவேயின் அன்டிபிளவர்வபெற்றுள்ளார். இரண்டாம்இடத்தை சச்சின் டெண்டுல்கரும் மூன்றாம் இடத்தை ஸ்டீவ் வோவும் நான்காம் இடத்தை இன்ஸமாமுல்ஹக்கும் ஐந்தாம் இடத்தை மஹேல ஜெயவர்த்தனவும் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சாளர் வரிசையில் முதலிடத்தை கிலேன் மெக்ராத்தும் இரண்டாம் இடத்தை ஷோன் பொலக்கும் மூன்றாம் இடத்தை முரளீதரனும் நான்காம் இடத்தை அலன் டொனால்ட்டும் ஐந்தாம் இடத்தை டரன்கபபும் பெற்றுள்ளனர். (செ-02)

## பாகிஸ்தான் அபிவிருத்திக்கு ஐ.நா.168 மில்லியன் உதவி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என ஐ. நா: அபிவிருத்தித் திட்டம் 168 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கி உள்ளது தற்போது வழங்கப்பட்ட நிதி, கடந்த வருடம் வழங்கப் பட்ட நிலையை விட இரண்டு மடங்கு என்று பாகிஸ்தானின் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 98 ஆம் ஆண்டின் பின் பாகிஸ்தானில் பொருளாதாரத்தை மறு சீரமைக்கும் பொருட்டு நீண்ட கால திட்டங்கள் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டு வருவதாக ஐ. நா அபிவிருத்தித் திட்டம் தெரிவித்துள்ளது; எனினும் அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கியதை அடுத்து அதன் மீதான பொருளாதார தடைகள் நீக்கப்பட்டு பெருமளவு நிதி உதவி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது; (செ-02)

## கொடுப்பனவு

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படும் கடல்வளப் பாதுகாப்புத் தொண்டர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு விரைவில்வழங்கப்படவுள்ளதாகதெரிவிக்கப் பட்டுள்ளது. [செ-232]

## இன்று ஒரு தகவல்

### ஏன் எதிர்க்கவில்லை?

ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் நல்ல பண்புகளுடையவனாக விளங்கினான். இதனால் எல்லோரும் அவனைப் புகழ்ந்தார்கள். இதனால் பொறாமை கொண்ட முரட்டுச் சிறுவன் ஒருவன் வேண்டுமென்றே அவனை வம்புக்கிழுத்தான். ஆனால் இந்தச் சிறுவனோ ஏதும் பேசவில்லை கோபங் கொண்ட முரட்டுச் சிறுவன் அவனை நன்கு அடித்தான். ஆனால் அவனோ எதிர்த்து ஓர் அடிகூட அடிக்கவில்லை. எல்லா அடிகளையும் அமைதியாக வாங்கிக் கொண்டான். கை ஓயும்வரை அடித்துவிட்டு முரடடுச் சிறுவன் அங்கிருந்து சென்று விட்டான்.

உடலெங்கும் காயத்தோடு வீடு திரும்பினான் சிறுவன். நடந்ததை அறிந்து துடிதுடித்த அவன் தாய் ''அந்த முரட்டுப் பையன் உன்னைவிட அதிக வலிமை படைத்தவனல்லவே. நீ அடித்திருந்தால் அவனால் தாங்கியிருக்க முடியாதே. ஏன் நீ அவனைத் திருப்பித் தாக்கவில்லை?'' என்று கேட்டாள்.

''அம்மா! நானும் அப்படிச் செய்தால் அவனைப் போலக் கெட்ட பையனாகவல்லவா ஆகிவிடுவேன். அதனால்தான் பொறுமையாக இருந்தேன்'' என்று பதில் சொன்னான் சிறுவன். நற்பண்புள்ளவனாகத் தன்மகன் விளங்குவதைக் கண்ட தாய் மகிழ்ச்சியுடன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

பேராசிரியர் எ. சோதி

# புலிகளின் தற்கொலை போராளிகள் மட்டு நகரினுள் ஊடுருவினர்

## கட்சித் தலைவர்களுக்கு முன்னெச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரினுள் ஒரு பெண் உட்பட இரண்டு தற்கொலைப் போராளிகள் ஊடுருவியமை தொடர்பான தகவல்கள் தமக்கு ஏற்கனவே கிடைத்ததாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து ஆயுதக் குழுக்களினதும் அரசியற் கட்சிகளினதும் முக்கிய தலைவர்களுக்கான பாதுகாப்புக் குறித்து.

இத்தற்கொலைப்போராளிகளது செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கைகளில் தாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும்,

இதனால் அரசியற் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

[உ-5]

## அழகுராணியின் வீட்டுக்கு குண்டு வீச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்காக தீவிர பிரசாரத்தில் ஈடுபடும், உலக திருமதி அழகுராணிப் போட்டியில் வெற்றி பெற்றவரின் வீட்டின் மீது இனந் தெரியாதோர் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

1984ம் ஆண்டு திருமதி அழகுராணிப் போட்டியில் இலங்கை சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற ரோசி சேனநாயக்காவின் வீட்டின் மீதே குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

தாக்குதலினால் சேதம் எதுவும் ஏற்படவில்லையாயினும் தனதும் பிள்ளைகளினதும் கணவரனதும் பாதுகாப்பு குறித்து தான் பெரிதும் அச்சமடைந்துள்ளதாகவும் ரோசி தெரிவித்துள்ளார்.

(இ)

## சுன்னாகத்தில் சைக்கிள் திருட்டு

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள புத்தகக்கடை ஒன்றின் உரிமையாளரின் துவிச்சக்கரவண்டி கடையின் முன் நிறுத்திவைக்கப்பட்டுள்ளவேளை களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக துவிச்சக்கரவண்டியின் உரிமையாளர் நவநீதன் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

(உ-207-7;

## கத்தோலிக்க ஆயர்கள் கட்சிகள் மீது கண்டனம்

### தம்நலன்கருதிசெயற்படுகின்றனராம்

(கொழும்பு)

அரசியற் கட்சிகள் தமது சொந்த மற்றும் கட்சி நலன்களையே கருத்தில் கொண்டு செயற்படுவதாக கத்தோலிக்க ஆயர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது! கட்சிகளின் சுயநலப் போக்குக் காரணமாகவே இலங்கையில் போரும் பொருளாதாரத் தளம்பலும் கஷ்டங்களும் அதிகரித்து செல்கின்றன.

அரசியல் வாதிகள் அனைவரும் நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தல் ஒன்றை உறுதி செய்ய முன்வர வேண்டும்.

அத்துடன், ஒரு கட்சிமீது இன்னொரு கட்சி அவதூறுகள் பேசுவதும் சேறுவாரிப்பூசுவதும் ஆகிய நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டுமெனவும் அவ்வறிக்கையில் மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பௌத்த பிக்குகளின் அமைப்பும் அரசியல் வாதிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-5)

## முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சொந்தஇடத்தில் குடியமர்த்த சட்டம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் அகதி முகாம்களில் வசித்து வரும் மக்களை மீண்டும் சொந்த இடங்களில் சென்று குடியமர்த்த நீதி இன விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வகையில் இவ் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 17ஆயிரம் குடும்பங்களை அவர்களின் சுயவிருப்பத்தின் பேரில் இராணுவக் கட்டுப்பாட்டுபிரதேசத்திலோ அல்லது கட்டுப்பாடற்றபிரதேசத்திலோ சென்று குடியேறுவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுத்து வருவதாக இனவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை முகாம்களில் தொடர்ந்து இருக்கவிரும்புவோர்களுக்கும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் அமைச்சு அறிவித்துள்ளது.

(உ-4)

## ஐ. தே. க. அரசமைத்தால் பெண்களின்பங்குபணிகள் மேலும் விருத்தியாகும்

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கும், மாகாண சபைகளுக்கும் தெரிவு செய்யப்படுபவர்களில் 25 வீதமானோர் பெண்களாக இருக்கக்கூடியதாக தாம் சட்டமியற்றப போவதாக ஐ.தே.க தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

பெண்களின் பங்குபணிகளைமேலும்விருத்திசெய்யும் வகையிலான ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்கும் மகளிர் கவுன்சில் ஒன்று அமைக்கப்படும் என்றும் விஞ்ஞாபனம் தெரிவித்திருக்கிறது.

(உ)

## ஆசிரியர் இடமாற்ற சேவை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்ற சேவைக்கூட்டம் இன்று பி.ப 1.00 மணிக்கு மலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ் சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் ஐந்து வலயக்கல்விப்பணிப்பாளரும் மூன்று ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், அலுவலக நிர்வாக உத்தியோகத்தர்களும், கலந்துகொள்வார்கள்.

இக்கூட்டத்தில் எழுபதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(எ-19)

## புதிய கப்பல் துறை முகம்

[கொழும்பு]

அம்பாந்தோட்டையில் பாரிய கப்பல் துறைமுகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அரசாங்க வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை கப்பல் துறை, துறைமுகங்கள் அமைச்சரும் அம்பாந்தோட்டைஎம்.பி.யுமான மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தென்மாகாணத்தின்பொருளாதார நடவடிக்கைகள் இதனால் மேம்படும் என்று நம்பப்படுகிறது.

[உ]

## வாக்குச் சீட்டுக்கள்குறித்து அலட்சியமாக இருக்காதீர்

### உதவி தே. ஆணையாளர்

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு யாழ்ப்பாணக் குடா நாட்டில் வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் இறுதித் திகதி இம் மாதம் 27 ஆம் திகதி என்றும், அவை கிடைக்காதவர்கள் டிசம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் தபாலகம் சென்று உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் இவ் விடயத்தில் அலட்சியமாக இருந்ததால் அவர்களது வாக்குச் சீட்டுக்கள் வேறொருவர் வாக்குப் போட உதவலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம் முறை தேர்தல் சம்பந்தமான அனைத்து சட்ட திட்டங்களும் இறுக்கமாகப் பின்பற்றப்படும் என்றும் தேர்தலினால் வன்முறைகள் ஏற்படாதவாறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

[எ-19]

## குளங்களின் நீர்மட்டத்தை பேணுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மாரி மழை காரணமாக விவசாயக் குளங்களில் நீர்மட்டம் உயர்ந்துவருவதைக்கருத்திற்கொண்டு நீர்வீணாக கடலில் சென்று கலப்பதைத் தவிர்க்கும் வகையில் தடுப்புப் பலகைகளை இட்டு நீர்மட்டத்தைப் பேணுமாறு சகல விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் சி. சுந்தரேசன் அறிவித்துள்ளார்.

மழை வீழ்ச்சி, எதிர்வரும் தினங்களில் அதிகரித்து நீர் மட்டம் உயர்ந்து அணைக்கட்டு சிதைவதால் குடிமனைக்குள் வெள்ளம் புகும் நிலை ஏற்படின் அத்தடுப்பு பலகைகளை அகற்றி மேலதிக நீர் வடிந்து செல்ல ஆவன செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெரும்பாக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப அலுவலர்களுடன் இது தொடர்பாக தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-19)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு II ஆ, விவசாயப் போதனாசிரியர் பயிலுனர் ஆகியவற்றுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 26ஆம் திகதியாகும். மேலதிக விபரங்களைவலம்புரிக்காரியாலயத்தில்பார்வையிடலாம்.

(உ-3)

## வன்முறை மூலம் வாக்குக் கொள்ளையிட ஆளும் அரசு முயற்சி

### ஜே.வி.பி.குற்றச் சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சம்மாந்துறை தேர்தல் தொகுதியில் வன்முறைகள் மூலம் வாக்குக்கொள்ளையில் ஈடுபட பொதுஜன ஐக்கிய முன்னணி முயல்வதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

மக்கள்விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் நடைபெறுவதற்கான காலம்அண்மித்துவரும் இவ்வேளையில், எதிர்க்கட்சி மீது வன்முறைகளை தூண்டிவிட்டு அதன் மூலம் வாக்குக் கொள்ளையில்ஈடுபட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் வாதிகள் முனைந்து வருகின்றனர்.

மேற்படிபகுதியில் ஏற்பட்டுள்ள நிலமையை கவனத்தில் கொண்டு அங்கு நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்தப் பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அக்கடிதத்தில் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(உ-4)

## சிந்தனைக்கு விருந்து

**கன்றினது தாயாய்க் கசிவான்**

நாம்எமதென் றேநிதமும் நாசாண வக்கடலில்
போம்வரையிற் போதமளி யான் ஐயன் - நாம்
முற்றாய் அவனடியில வைத்தாலெம முன்வந்துஎம்மை
கற்றா எனக்கசிவன் காண்

கற்றா- கன்றினதுதாய்
நாசாணவக்கடல் - நாசம் அளிக்கும் ஆணவக்கடல்

'பழையவன்'

# புவியியற்றுறையில் புதுமைகள் பல சேர்த்த

# அமரர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன்

**பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**
தலைவர் - புவியியற்றுறை
யாழ். பல்கலைக் கழகம்.

வேலணை மேற்கு செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் மகனாக 11.09.1942இல் அவதரித்த செ. பாலச்சந்திரன் 1969 இல் சத்தியலட்சுமியை மணம் புரிந்து மூன்று பெண் குழந்தைகளையும் இரு ஆண் குழந்தைகளையும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தார் 20 10.2001 அன்று தனது 59 ஆவது வயதில் பூவுலக வாழ்வை நிறைவு செய்து விண்ணுலக வாழ்வை ஏற்றுக் கொண்டார். இவரது பாரம்பரியம் சமயபக்தி மிக்க உயர் பண்புகளைக் கொண்டதாக அமைந்திருந்தது: இவரது தந்தையின் குணாம்சமான அன்பு அறம், விருந்தோம்பும்பண்பு, எதிலும் நிறைவு காணும் தன்மை ஆகியநற்குணங்களை அச்சொட்டாக இவரும் கொண்டிருந்தார். வேலணை நடராசா வித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்வியையும் வேலணை மத்திய கல்லூரியில் இடை நிலைக் கல்வியையும் கற்ற இவர் 1963 இல் இக்கல்லூரியில் இருந்துபேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்தமுதல் மாணவன் என்றபெருமையையும் தேடிக்கொண்டார். 1967 இல் புவியியல் சிறப்பு கலைமாணிப் பரீட்சையில் 2 ஆம் வகுப்பு மேல் பிரிவில் சித்தி பெற்றார். அடுத்த ஆண்டே கொழும்புப் பல்கலைக் கழகத்தில் துணைவிரிவுரையாளராக பதவி பெற்றார். 1973 இல் பிரித்தானிய கடல் கடந்த மாணவர் புலமைப் பரிசில் பெற்று பேமிங்காம்பல்கலைக் கழகத்தில் பிரயோகக் கால நிலையியல்துறையில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டதை1975 இல் பெற்றுக் கொண்டார்; 1975 இல் விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்ற இவர் 1978 மே மாதம் யாழ். பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாகி வருகை தந்தார். 1982 இல் சிரேஷ்ட விரிவுரையாளராக பதவிஉயர்வுபெற்றஇவர் 1992இல்இணைப் பேராசிரியரானார். 1992 முதல்1997வரைபுவியியல்துறைத்தலைவராக கடமையாற்றினார். 1999 முதல் இறக்கும் வரை கலைப் பீடாதிபதியாக இருந்தகாலத்தல் சிறிது காலப்பதில் துணைவேந்தராகவும் கடமையாற்றியுள்ளார்; 1997 முதல் 1999 வரையான இரண்டாண்டு காலம் தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் புவியிய அதிதிப் பேராசிரியராகவும் கடமையாற்றினார்; தென்கிழக்குப்பல்கலைக் கழகத்தின் புவியற்றுறையைஒழுங்கு படுத்துவதிலும் புவியியல் கற்கை நெறிக்குரிய பாடவிதானங்களைத் தயாரிப்பதிலும் இவரது பங்களிப்பை அப்பல்கலைக் கழகம் பெரிதும் பாராட்டியுள்ளது.

## மேலதிக சேவைகள்

பல்கலைக் கழக கல்விசார் சேவைகளுக்கு மேலதிகமாகவும் இவர் பல பணிகள் ஆற்றியுள்ளார். முக்கியமாக யாழ். பல்கலைக் கழக மாணவ ஆலோசகராக 1988- 1997 வரையும் கடமையாற்றியுள்ளார். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவராக 1986-1988 வரை பணி புரிந்தஇவர் கலைப் பீடத்தின் ஆங்கிலஆய்வுச் சஞ்சிகையான 'The Sri Lankan Journal of South Asian Studies' இன் ஆசிரியராகப்பணியாற்றினார். கலைப்பீட 'சிந்தனை' ஏட்டின்ஆசிரியர்குழுவிலும் பணியாற்றியுள்ளார். வேலணை மகா கணபதி கோயில் கும்பாபிஷேக மலரினை 1990 இல் வெளிக் கொணர்ந்தார். தீவுப் பகுதி அபிவிருத்தி கழகத்தினை உருவாக்கி அப்பிரதேச அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தவர். தனது மதிப்புக்குரிய பேராசிரியர் செல்வநாயகத்துடன் இணைந்து 1979 இல் தென்மராட்சிப் பகுதிகளின் கிராம பொருளாதார அளவீட்டினை மேற்கொண்டார். அத்துடன் பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுச் சபையின் செயலாளராகவும் கடமையாற்றினார்.

## புவியியல் ஆய்வு

புவியியல் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளை உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும்வெளியிட்டார். பிரயோக காலநிலை என்பது இவரது சிறப்பான ஆய்வுப் புலமாக அமைந்தது. பிரயோக காலநிலையியல் இலங்கையின் பௌதிகப் புவியியல் ஆகியஇரு நூல்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. பல்வேறு கருத்தரங்குகளிலும் நினைவுச்சொற்பொழிவுகளிலும் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்; யாழ்ப்பாணக்காலநிலைவரட்சியின் பரம்பல், சூறாவளியின் தாக்கம், நீர்வளம, வடகிழக்குப் பிரதேசங்களின் வளங்கள் போன்ற தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றன. தமிழ் மொழி மூலம் கற்பித்தலை வலியுறுத்தி வந்த இவர் தமிழில் புவியியல் தொடர்பானபல்வகை ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார்; முக்கியமாக பழைய தமிழ்இலக்கிய செய்திகளுடன் இணைந்து சில ஆய்வுகளமேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது: சங்க காலத்தில் நிகழ்ந்த சூறாவளி பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டார். கடும் சுகவீனமுற்று யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையிலும் கூட பட்டமளிப்பு விழா தொடர்பான நினைவுப் பேருரையை எழுதி வழங்கியமை அவர் இறக்கும் வரை கல்விச் சிந்தனையுடன்இருந்தமையை புலப்படுத்துவதாகும். அக்கட்டுரை தமிழ் இலக்கியங்கள் காட்டும் தென் தமிழ் நாடு பற்றிய புவியியல் விளக்கமாக அமைந்திருந்தமை அவரது தமிழ்ப்பற்றைப் புலப்படுத்தி நிற்கின்றது. புவியியலில்தனக்கென தனி முத்திரை பதித்த பேராசிரியர் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய பெருமைக்குரியவர். அகிலம் முழுவதும் பரந்துள்ள அவரது மாணவர்கள் ஊடாக பேராசிரியரின் புகழ் வாழ்வு நீடித்து நிலைக்கும்.

---

நல்லூர் பிரதேச சபை

# மீள் கேள்வி அறிவித்தல்

## சந்தை, இறைச்சிக் கடை

## அறிவித்தல்- 1

2002 ஜனவரி 1ம் திகதி தொடக்கம் 2002 மார்கழி 31வரையான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் கேள்விகள் 27. 11. 2001ம திகதி காலை 10, 00மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 2. 00மணிக்கு திறக்கப்படும். 23. 11. 2001ம் திகதி நண்பகல் 12. 00மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். இது சம்பந்தமான நிபந்தனைகள் 02. 11. 2001 திகதிய வலம்புரி, உதயன் பத்திரிகையில் பார்வையிடலாம் அல்லது நல்லூர் பிரதேச சபை காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

| துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்/ இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்- கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (ஜி.எஸ்.ரி- தவிர்ந்தது) |
|---|---|---|---|
| **நல்லூர் உப- அலுவலகம்** | | | |
| திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம். | 500/- | 5000/- | 345650/- |
| **கொக்குவில் உப- அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில்சந்தை மாட்டிறைச்சி கடை. | 350/- | 3000/- | 189000/- |
| 02. கொக்குவில்சந்தை ஆட்டிறைச்சிக் கடை. | 350/- | 3000/- | 52360/- |
| 03. கொக்குவில் உப- அலுவலகம்- ஆட்டிறைச்சிக் கடை. | 350/- | 3000/- | 40000/- |
| 04. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி, மீன்சந்தை. | 100/- | 500/- | 1000/- |

## ஆடியபாதம் வீதி புதிய கடைகள்

## அறிவித்தல்- 2

கடை இல: 34, 35

12. 09. 2001ம் திகதிய வலம்புரி, உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய கேள்விகள கோரப்படுகின்றது.

விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி - 23.11.2001 நண்பகல் 12. 00மணிவரை
விண்ணப்பப்படிவம் ஏற்கும திகதி - 27. 11. 2001 காலை 10. 00மணிவரை
விண்ணப்பப்படிவம் திறக்கும் திகதி - 27. 11. 2001 மாலை 2. 30மணி

| கடை இல. | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த தொகை (ஜி.எஸ். ரி தவிர்ந்தது) |
|---|---|---|---|
| 34 | 500/- | 10000/- | 324000/- |
| 35 | 500/- | 10000/- | 324000/- |

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி,
16. 11. 2001.

துரைதவராசா. ஜே பி
உப - தலைவர், நல்லூர் பிரதேசசபை.
(கி-2892)

---

மட்டக்களப்பில் புலிகளின் பகுதிக்குள்

# உழவு இயந்திரங்கள் கொண்டுசெல்லதடைநீக்கம்

## படைஅதிகாரி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு உழவு இயந்திரங்களை கொண்டு செல்வதற்கான தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கட்டளை அதிகாரி கேர்ணல் வி.எல்.ஆர். அன்ரனி தெரிவித்துள்ளார்

வலையிறவு பாலம், செங்கலடி கரத்த பாலம், உப்போடை வீதி கிரான் பாலம், சந்தனமட வீதி ஊடாக உழவு இயந்திரங்களை எடுத்துச்செல்ல கடந்த இருவாரமாக தடை விதிக்கப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே: (க)

# உணவுக் கடை உரிமையாளர்களிடம் தண்டப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரச் சீர்கேடான முறையில் உணவு உற்பத்தியில் ஈடுபட்ட தேனீர்க்கடை உரிமையாளர் மீதும் பேக்கரி உரிமையாளர் மீதும் யாழ். நீதிமன்று சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

உரும்பிராய்ப் பகுதி வர்த்தகர்களான பெ.பஞ்சலிங்கம் க. ஐயாத்துரை ஆகியோரிடமே மேற்படி குற்றத்துக்காக தலா 5 ஆயிரம் குற்றப் பணம் அறவிடப்பட்டுள்ளது. (உ-10)

# ஹக்கீமுடன் சந்திப்பு

[கொழும்பு]

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவினர் நேற்று முன்தினம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து அமைதியான தேர்தல் தொடர்பாகவும் 17வது தேர்தல் திருத்தச்சட்டம் தொடர்பாகவும் பேசியுள்ளனர்:

இக்குழுவினர் இன்று தமிழ்க் கட்சித்தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளனர் [வ]

# ஒரு வாரத்துள் இரு சோதனை

(இருபாலை)

கோப்பாய் தெற்கு பகுதியில் கடந்த 16 ஆம் திகதி காலை 6.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தீவிர சோதனை செய்துள்ளனர்; இது ஒரு வாரத்துக்குள் செய்யப்பட்ட இரண்டாவது தீவிர சோதனை என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-221)

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம் மக்களாதலே வேறு

குறள்

=================

# வலம்புரி

=================

## துணிவான மனு தாக்கல்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கோ, ஐககிய தேசியக்கட்சிக்கோ போட்டியிடும் உரிமை இல்லை. அவர்களின் வேட்புமனுக்களை ரத்துச் செய்யவேண்டுமெனகோரி கொழுமபு உயர் நீதிமன்றில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பொதுமகன்ஒருவர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் செய்துள்ள மனுவுக்கு கிடைக்கின்றதீர்ப்பு சாதகமானதோ அன்றி பாதகமானதோ என்பதை உயர் நீதிமன்று தீர்மானிப்பினும், இலங்கை நாட்டுப் பிரஜை ஒருவர் துணிச்சலோடு - முதன் முதலாக இரு பெரும் பேரினவாதக் கடசிகளுக் கெதிராக மனுத்தாக்கல் செய்திருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம், என்பவற்றினூடாக, இரண்டு கட்சிகளும் தமிழ் இளைஞர்களைக்கொன்று குவித்தன - சிறைகளில போட்டு சித்திரவதை செய்தன.இளமைக் காலத்தை இருணட சிறைக்குள் வருடக்கணக்கில் கழித்த அப்பாவித் தமிழ் இளைஞர்கள் இன்று உளநோய் வாய்ப்பட்டு அவர்களின் எதிர் காலமே அஸ்தமனமாகிவிட்டது. இந் நிலைக்கு ஐக்கியதேசியக் கட்சியும்- பொதுஜன ஐககிய முன்னணியும காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இரு கட்சிகளும் தத்தம் ஆடசிக் காலததில் அப்பாவி மக்களைக கொன்று குவித்த குற்றம், மற்றுய தமிழ்க் குழுககளை இந்திய அமைதிப் படையுடன் சேர்தது, தமிழ் இளைஞர்களைக் கொன்றொழிததமை இவையெல்லாவற்றையும் நோக்கும் போது ஐ.தே.கட்சிக்கோ பொ. ஐ. முன்னணிககோ தேர்தலில் போட்டியிடும் அதிகாரம் இல்லையென்பதும், அவர்களுக்கு ஆட்சிககட்டில் ஏறும் உரிமை கிடையாமதென்பதும் சட்டத்துக்கு வெளியில் வெளிப்படையான, உண்மை.

இதில் தமிழ்க் கட்சிக் கூடடமைப்பில் சேர்ந்துள்ள ஓர் கட்சியும் அடங்கும் அநதக்கட்சி மண்டையில் போடவென்றே சிறபபுப் பெயர் சூட்டிய கதை பற்றி தேர்தல் நெருங்க ஆராய்வதே நல்லது.

ஏனெனில் எத்தரப்பினர் மறந்தாலும் புலிச் சாயம் பூசி நடந்த படுகொலைகளை யாழ்ப்பாணத்துமக்கள் எளிதில் மறப்பதற்கு அவர்கள் முட்டாள்கள் அல்லவே.

---

# இனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட வழிகாட்டும் 'கலைப்பாலம்' கலை நிகழ்வுகள்

**தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களக் கலைஞர்கள் யாழ். மண்ணில் நிகழ்த்திய கலை நிகழ்வுகள் பற்றிய ஒருபார்வை.**

இலங்கையில் சமாதானத்தின் அவசரமும் அதன் அவசியமும் பெரிதும் உணரப்படும் வேளை இது. இனங்களுக்கிடையிலான பகைமை உச்சக் கட்டத்தை அடைந்ததன் விளைவு நாட்டில் இரத்த ஆற்றை ஓட வைத்துள்ளது. மனிதனை மனிதனாக நோக்காததன் காரணத்தால் மரணங்கள் மலிந்த பூமியாக இச் சிறு தீவு மாறியது.

### உறவுப் பாலம்

இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் இன்று பெரிதும் பேசப்படுகிறது. இதற்கு ஒரு வழியாக கலையைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் இன நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சியில் பல அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன.

அந்த வரிசையில் கலை வழியை இறைபணியாக ஆற்றும் திருமறைக் கலாமன்றம் கலைப் பாலம வாயிலாக தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கும் இடையே ஒரு உறவுப்பாலத்தைக் கட்டியெழுப்புகின்ற சீரிய பணியினை முன்னெடுத்துள்ளது. இந்த நிகழ்வுத் தொடரின் மூலம் எமது பிரதேச கலை வடிவங்களுக்கூடாக எம் கலாசார வழுமியங்களையும் வாழ்க்கை முறைகளையும் உளக் குமுறல்களையும் வேதனைகளையும் தென்னிலங்கை வாழ் மக்களுக்கு எடுத்துச் செல்லும் பணியினை மேற்கொணடிருக்கும் திருமறைக் கலாமன்றம் இம் மாதம் தென்னிலங்கை கலைஞர்களை யாழ் மண்ணைத் தரிசிக்க வைத்து விட்டது.

### சிங்களக் கலைஞர்கள்

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் தென்னிலங்கை சிங்களக் கலைஞர்களின் கலை நிகழ்வுகள அரங்கேறிக் கொணடிருக்கின்றன. கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இவர்களின் கலைப்பால நிகழ்வுகள இடம் பெற்றன.

அமைதிப் பாடலுடன் ஆரம்பமான நிகழ்ச்சிகள் ஒரு வித்தியாசமான கலாரசனையினை பார்வையாளர்களின் மத்தியில விதைத்தன.சிங்கள பாரமபரிய கலை வடிவங்களை தொலைக்காட்சி வாயிலாகப் பார்த்து வரும் யாழ் மக்களில் அநேகர் அவற்றை நேரே கண்டு களிக்கும் சந்தர்ப்பத்தை கடந்த பல ஆண்டுகளாக இழந்திருந்தனர்.

அமைதிப் பாடலில் 'ஷாந்தி' என்ற சொல், எம் மதத்திற்கும் எம் மொழிக்கும் பொதுவானது. அமைதியை விரும்பும் மக்களது மன உணர்வுகளை அப் பாடல் பிரதிபலித்தது.தொடர்ந்து எமது புஷ்பாஞ்சலியை ஒத்த 'பூஜ நடடும' என்ற நடன வடிவம் அனைவரது கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. தாளத்திற்குகேற்ப மெய்ப் பாடுகளை வெளிக் கொணர்வதில் கலைஞர்கள் வெற்றி பெற்றுள்ளாகள் கலையில் தேர்ச்சி பெற்ற இவர்கள் இளம் பராயத்தினராக உளளமை ஈண்டு நோக்கத்தக்கது.

### ஆத்மார்த்த உணர்வு

கலை அனைத்து ஜீவன்களுக்கும் பொதுவான ஒன்று. அதன் மூலம் பெறப்படுகின்ற உணர்வு வெளிப்பாடும பொதுவானதே. கலை வடிவங்கள மாறுபடலாம்; அவை தொட்டுச் செல்லும் கரு ஆதமார்ததமான உணர்வு நிலைப்பட்டதாக, வக்கிரங்களைக் கடந்த மானுடத்தின் பக்கங்களைத தேடுகின்ற ஒன்றாக அமைவதையே கலைபபால நிகழ்வுகள உணர்ததி நிற்கின்றன.

> திருமறைக் கலா மன்றக் கலைத்தூதுப் பயணத்தில் வேற்றுமைகளை மறந்து உறவுப் பாலத்தில பங்கெடுதத கலைஞர்கள் தமிழ் சிங்கள இணக்கத்திற்கும், சாந்தி சமாதானததிற்குமான இலக்கை அடைய உந்துசக்தியாக இருக்கவேண்டும.

தற்காலத்தில் வழக்கொழிந்து போய்க் கொணடிருக்கும 'மயூரா வண்ணம' கண்டிய நடன வகையைச் சார்ந்தது. மயில் நடனம் என்று அழைக்கப்படும. இதன் எச்சங்கள சிங்கள மக்கள மத்தியில் இன்றும் நின்று நிலவி வருவதை எடுததுக்காட்டியது தொடர்ந்து இடமபெற்ற இந் நடனக் கோலம்.

### கலைப்பாலம்

காலத்தின் தேவையறிந்து தொடர்பாடலுக்குரியசெயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் திருமறைக் கலாமன்ற பாணந்துறை சிங்களக் கலைஞர்களும் 'விப்தியதீப' குழுவினரும கலைப்பாலம் மூலம் தமிழ் மக்களுடன் கை கோர்த்திருப்பது கலையினூடாகப் புரிந்துணர்வை வளர்க்க முற்படும் முயற்சியாக இருக்கிறது 1960 களின் பின்னர் இருந்து வந்த இடைவெளி இவர்களின் வருகையூடாக நிரப்பப்பட்டு விட்டது.

தொடர்ந்து சிங்கள பாரம்பரிய அரங்க வடிவங்களில் ஒன்றான கோலத்தின் 54 வகைகளில் ஒன்றான 'கிரிதேவி' நடனமும் மக்கள் சோர்வடையும் வேளைகளில் உற்சாக மூட்ட நிகழ்த்தப்படும் நகைச்சுவை சார் ஆடலான 'வலகபட்டுனவும்' நாட்டார் இசை நடனவடிவமான நான்தான் 'புஞ்சிகிரகம'வும் சிறப்பாக நிகழ்த்திக்காட்டப்பட்டன. நாடகமும அரங்கியலும்பயிலும்மாணவர்களுக்கு ஆற்றுகை ரீதியான செய்முறை விளக்கங்களை இவை பெரிதும் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

### உண்மைகள் வெளிவரலாம்

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரு கற்பனா ரீதியாக நோக்குகின்ற தன்மையே தென்னிலங்கை வாழ் மக்களிடையே இது வரை காலமும் இருந்து வந்தது. மண்ணின் அவலங்களையதார்த்த நிலைகளை நேரடியாகத் தரிசித்துச் செல்லும் குழுவினர் உண்மைகளை மேலும உறங்கவிட மாட்டார்கள எனநம்பலாம்.

மேலும் யுத்தத்தின்விளைவு பாரமபரிய கலை வடிவங்களை எமது இளம் சமுதாயம் அறியும் வாய்ப்பை இல்லாதொழித்தது. இந் நிகழ்வுகளில் பங்கு பற்றிய தென்னிலங்கை கலைஞர்களில் அனேகர் இளையோராக இருப்பது தமிழரின் பாரம்பரியகலைகள் வழக்கொழிந்து 'சலவை' செய்யப்பட்டுக் கொண்டிருக்கும இந்நேரத்தில் ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தத் தவறவில்லை. எமது இளம் சமுதாயத்தினரின் 'ஆர்வம்' மேலைத் தேசப்பாணிகளை பின்பற்றுவதில் அல்லது மரபுகளை மாற்ற விளைவதில் முனைப்புடன் இருப்பதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

### புளகாங்கிதம்

'யாழ்.மக்களைச் சந்தித்து உறவை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு கலைமூலம் கிடைத்தமையை இட்டு புளகாங்கிதம் அடைகிறோம். எதிர் காலத்திலும் இவ்வாறான முயற்சிகள் தொடரப்பட வேண்டும். இந்நிகழ்வின்மூலம் யாழ்ப்பாண மக்களுடனான எமது உறவு மேலும் பலம் பெறும் என உறுதியாக நம்புகிறோம்' என்று அங்கு உரையாற்றிய பாணத்துறை திருமறைக் கலாமன்ற பொறுப்பாளர் ஷெபாலி றணசிங்க குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

பாரம்பரிய ஆட்டவடிவங்களில் புதுமைகளைப் புகுத்தி ஆடப்பட்ட புத்தாக்க நடனங்கள் வயல் மற்றும் கடல் சார் நில அமைவுகளை நிலம் சார்ந்த ஒழுக்கங்களையும் விளக்க முயன்றன. அவற்றில் ஒருவிதமனோரம்மியப்பாங்கு மேலோங்கிக்காணப்பட்டது. இவை இங்குள்ளவர்களின் அரங்கு சார் பார்வையை விசாலித்துள்ளன என்றே கூற வேண்டும்.

கண்டிய நடனத்துடன் இணைந்த பாரம்பரிய நடனமும்,கிராமிய பண்பு சார்ந்த 'கொப்பரபற' என்ற தனிநடனமும் மாத்தறை மாவட்டத்திற்கே உரித்தான சாஸ்திரிய ஆட்டமுறைமையான 'பஞ்சுபத'வும வழங்கிய கலை உள்ளங்களின் உற்சாகமான ஆடல்கள் பாராட்டத்தக்கவை.

### விசில் ஒலிகள்

பாணந்துறை கலாமன்ற உறுப்பினர் இந்திரஜித்தின் 'அபிநாஷ்ய' என்ற தனி நடன ஆற்றுகையின் போது பார்வையாளர் பகக மிருந்து சென்ற விசில் ஒலிகள் அவரின் திறமைக்கு மேலும் புடமிட்டன என்றுகூறலாம். 'ஜனரஞ்சின' என்ற நளினத்தன்மையான ஆடல் மற்றும் 'மகாசம்மத' முகமூடி ஆட்டம் என்பன வேடிக்கைப் பாங்கான அரங்க விருந்துகள் எனலாம். கண்டிய நடனம் சிறப்பான தாளக்கோப்புடன் அமையப் பெற்றிருந்தது.

எனினும ஒரு சில கலைஞர்களே திரும்பததிரும்ப நிகழ்வுகளில் பங்கேற்றமை சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

மொழி அற்ற கலைத்தூதுப் பயணததில் வேற்றுமைகளை மறந்து உறவுப பாலத்தில் பங்கெடுத்தகலைஞர்கள தமிழ் -சிங்கள இணக்கத்திற்கும் சாந்தி சமாதானத்திற்குமான இலக்கை அடைய உந்துசக்தியாக இருக்க வேண்டும. அத்துடன்கலை மூலம அரசியல் இலாபம்தேட முற்படும ஆல்லது இனவாதத்திற்குவித்திடும் சக்திகளை இனங்கண்டு துரத்தவும் பின்னிற்கக் கூடாது.

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**

---

## தினசரி தியானம்

## சண்டையிடல்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று

திருக்குறள்

இறைவணக்கத்துக்கு நேரம் போதவில்லையே என்று ஏங்கியிருப்பவனுக்குப் பிறரோடு சண்டையிட நேரம எங்கே!

முற்றிலும் பரிபக்குவம் அடைந்திருப்பவன் மற்றவர்களோடு சண்டையிடுவதில்லை. பிறர் கூறும் கடுஞ்சொல்லை அவன் இன்சொல்கொண்டுஎதிரழைக்கிறான். சினத்துக்கு அவன் உள்ளத்தில் இடம்கொடுப்பதில்லை. யாதலால் பிறர் சினம் அவன் முன்னிலையில் மாயமாய் மறைந்து போய்விடுகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

---

## மட்டக்களப்பு கொலை ரணிலிற்கு முறையீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிவேட்பாளர் தூ ஜெயக்குமாரின் கொலை தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் அலிஸாகிர் மௌலானா அக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்காவிற்கு அறிவித்துள்ளார்.

இக் கொலை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாககட்சித் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் நடை பெற்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அஸ்லிநிமலன் சௌந்தரநாயகமும், பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரும மட்டக்களப்புநகர சபைத் தலைவரும் பிரபல பத்திரிகையளருமான செழியன் பேரின்பநாயகமும் சுட்டுக்கொலை செய்யப்பட்டமையும் ஏற்கனவே தெரிந்ததே.

(வ)

# நூற்றுக்கணக்கான தலிபான் வீரர்கள்

# அல்குவாடா இயக்கத்தால் சுட்டுக்கொலை!

## அமெ.விமான தாக்குதலில் 30 பொதுமக்கள் பலி

[காபூல்]

அமெரிக்காவினால் தேடப்பட்டுவரும் ஒஸாமா பின்லேடன் மறைந்துஇருக்கலாமென சந்தேகிக்கப்படும் கிழக்கு ஆப்கான் பகுதியில் 80சதுர கிலோமீற்றர் பரப்பளவு பிரதேசத்தை அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் சிறப்புக் கொமாண்டோ படையணி சுற்றிவளைத்துள்ளது.

இப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொள்ள ஹெலிகொப்டர்கள் மூலம் படைகள் இறக்கப்பட்டதாக லண்டனில் இருந்து வெளியாகும் சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பின்லேடனை தேடும் முயற்சி தீவிரமடைந்துள்ளதால் அவர் அங்கிருந்துபாகிஸ்தானுக்குள் தப்பிச்செல்வதைத் தடுக்கும் வகையில் அமெரிக்க, பிரிட்டிஷ் விசேட படையணியொன்று பாகிஸ்தானின் எல்லையில் காவலில் ஈடுபட்டுள்ளது.

மறுபுறத்தில் தலிபான் அமைப்புக்கு எதிராக அமெரிக்காவின் போர்விமானங்கள் குண்டுகளை வீசியவண்ணமே உள்ளது.

நேற்று நான்கு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை ஆப்கான் மீது வீசியதாக 'ஏ.எவ்.பி' செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

தெற்கு ஆப்கானில் அப்பாவி மக்கள் வாழும் முகாஜீதீன் பகுதியில் நேற்று வீசப்பட்ட குண்டினால் 30 அப்பாவிப் பொது மக்கள் துடிதுடித்து இறந்துள்ளனர்.

இதேவேளை வடக்கு ஆப்கானின் குண்டுஸ் நகரில சண்டையில் ஈடுபடும் தலிபான் படைகள், போரின் உக்கிரத்தினால் வடக்கு கூட்டணிப் படையினரிடம் சரணடைந்துவிடுவர் என்ற ஐயத்தில், பின்லேடனின் அல்குவாடா அமைப்பின் கொமாண்டோக்கள் நூற்றுக்கும் அதிகமான தலிபான் வீரர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். [இ]


## இன்று மாலை 6-30 மணிக்கு

திருமறைக் கலாமன்ற அரங்கில்

# கலைப்பாலம் - 2001

நிறைவு நாள் சிறப்பு நிகழ்ச்சிகள்

★ தென்னிலங்கை கலைஞர் கௌரவிப்பு
★ நடன நிகழ்வுகள்
★ யாழ். தென்னிலங்கை திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் இணைந்து வழங்கும்

DARSHANA
தரிசனம்
(வார்த்தைகளற்ற நாடகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம் இலவசம்

-திருமறைக்கலாமன்றம்-

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021- 2393

(C/2894)


## நிலக்கண்ணி

...டைந்ததாக பொலிசார்தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எதுவித கருத்தும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (க)

## தேர்தல்ஏற்பாடு

கொழும்பில் உள்ளதேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் இக் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

இதில் சகல மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், உதவித்தேர்தல் ஆணையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக இறுதியாக நடைபெறவுள்ள கலந்துரையாடல் இதுவாகும் இக் கலந்துரையாடலில் ஜனநாயக முறையில் அமைதியாகத்தேர்தலை நடத்துவது தொடர்பாக சகல அம்சங்களிலும் ஆராய்ந்து இறுதி முடிவெடுக்கப் படவுள்ளது. இதனை அடுத்துதேர்தலுக்கான இறுதி ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடையுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ)

## மூன்று மீனவர்களை காணவில்லை

யாழ் கடல் நீரேரிப் பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் வீடு திரும்பவில்லையென விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

## பிரச்சினைக்கான

...திகள் ஆயுதம் ஏந்திப்போராடும்வரை அதற்கு நாம் முகம் கொடுத்தே தீரவேண்டும். யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இராணுவத்தையும் பலப்படுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்த விடயங்களில் கூடிய கவனமெடுத்துச் செயற்படுமென்றும் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். [வ]

# ஐ.தே.க - பொ.ஐ.மு மோதல்

## நால்வர் படுகாயம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில நேற்றுக்காலை இடம்பெற்ற மோதலில், நான்குபேர் படுகாயமடைந்ததாக பேலியகொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன கலப்பதி தெரிவித்துள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி

(2ஆம் பக்கம் பார்க்க)

## விமான

...யத்தை சுற்றியிருந்த தடுப்பு வேலியில் விமானப்படையினர் தங்களது காதலிகள் வந்து செல்வதற்கு வசதியாக ஏற்படுத்தியிருந்த சிறிய இடைவெளிகள்மூலமே விடுதலைப்புலிகள விமானத்தளத்திற்குள நுழைந்துள்ளனர்.

விமான நிலையத்தைதாக்குவதற்கு முன்புஒத்திகை பார்க்கும் முகமாக புஸ்பகுமாரும் விக்டர்டொமினிக்கும் ஏழுதடவைகள விமனநிலையத்திற்குள சென்று வந்திருப்பதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை இவ்விமானத் தாக்குதலையடுத்து விமான நிலையத்தில் அலட்சியமாக பணிபுரிந்த 31விமான ஊழியர்கள அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## தேர்தல்...

...முகாம்களோ இல்லை. இந் நிலையில் அங்கு நீதியான தேர்தல் நடைபெறுமென்பதில் சந்தேகமேற்பட்டுள்ளது.

இதனால் அப் பகுதிகளில் பொலிஸ் நிலையமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார். [இ-43]

## புலிகள்...

...ருப் படையினரும் கூட்டாகசேர்ந்து நகர்ப் பகுதி முழுவதையும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இதன்போது 15தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு ஐக்கியதேசியகட்சி வேட்பாளா தமபிராசா ஜெயக்குமார் நேற்று முன்தினம் மாலை இனம்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டமை தெரிந்ததே (ந-4




தியாக மாமனிதர்

# அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

## பொதுத்தேர்தல் - 2001

விடுதலைப் பாதையில் வீறுநடை போட்ட விண்ணன்
அஞ்சாத நெஞ்சும், கெஞ்சாத வாழ்வும் கொண்ட வீரன்
தமிழ்க்குல மானம் காத்துநின்ற தலைவன்
அன்னை தமிழின் அடிமை விலங்கொடிக்க உழைத்த உத்தமன்
இலட்சியம் வெல்ல ஆதரவு தருவோம்.

| | | |
|---|---|---|
| திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி [1] | திரு. சி. வி. கந்தையா சிவஞானம் [5] | திரு. கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் [8] |
| சமாதானம் நிலவ உழைப்போம் | நிம்மதியான வாழ்வு பெற உழைப்போம் | சுதந்திர வாழ்வுக்காக உழைப்போம் |

### என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

தமிழர் விடுதலைக்கூட்டணி ✕

எங்கள் விருப்புவாக்குகள்
மூன்றும்
தமிழ்க் காங்கிரஸுக்கே

✕ 2 3 4 ✕ 6 7 ✕ 9 10 11 12

(-3946)

- நல்லூர் வாழ் மக்கள்.


இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் நவம்பர் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.